IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# குழந்தை இலக்கியத்தில் பாடுபொருள் கட்டமைப்பு

**Mrs. P.Navasakthi, D.T.Ed., M.A., B.Ed., NET**
Assistant professor in Tamil,
PTR College of engineering and Technology
Austinpatti, Madurai - 625 008

**பா.நவசக்தி**, D.T.Ed., M.A., B.Ed., NET
உதவிப்பேராசிரியர் தமிழ்
பி.டி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
ஆஸ்டின்பட்டி, மதுரை - 625 008

**Abstract**

The thematic structure of children's literature is based on the psychological, social, educational, and cultural development of the child. This study classifies and examines the various themes found in children's literature – such as narrative poems, playful songs, folk songs, poems, short stories, and plays. It highlights how the greatness and sweetness of children are praised in the *Tirukkural* and in Bharathiyar's songs, and emphasizes the notion that a child is the source of a family's happiness and the foundation of future society.

Songs about nature and dramatic elements also hold a significant place in the thematic structure of children's literature. The study extensively discusses songs that connect children with nature and enhance their aesthetic sensibility, as well as the impact of theatre – particularly the effect of the Harishchandra play on Gandhi – based on the principle that seeing and experiencing leaves a deeper impression on the mind. Thus, the study concludes that the themes of children's literature encompass multiple dimensions such as education, upbringing, nature, art, morality, and imagination, paving the way for the holistic development of the child.

**ஆய்வுச்சுருக்கம்**

குழந்தை இலக்கியத்தின் பாடுபொருள் கட்டமைப்பு என்பது குழந்தையின் உளவியல், சமூக, கல்வி, பண்பாட்டு வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். இவ்வாய்வு, குழந்தை இலக்கியத்தில் இடம்பெறும் பல்வேறு பாடுபொருள்களை – கதைப்பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள்,

கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் என – வகைப்படுத்தி ஆராய்கின்றது. திருக்குறளிலும் பாரதியாரின் பாடல்களிலும் குழந்தையின் சிறப்பும் இனிமையும் எவ்வாறு புகழப்பட்டுள்ளன என்பதனை எடுத்துரைத்து, குழந்தை என்பது குடும்பத்தின் மகிழ்ச்சிக்கும் எதிர்காலச் சமுதாயத்தின் அடித்தளத்திற்கும் உரியவர் என்ற கருத்தினை வலியுறுத்துகிறது.

இயற்கை பற்றிய பாடல்களும், நாடகக் கூறுகளும் குழந்தை இலக்கியத்தின் பாடுபொருள் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றன. இயற்கையோடு குழந்தைகளை இணைத்து அவர்களின் ரசனைத் திறனை வளர்க்கும் பாடல்களும், பார்த்து அறிதல் மனதில் ஆழப்பதியும் எனும் நாடகத்தின் தாக்கமும் – குறிப்பாக அரிச்சந்திரன் நாடகம் காந்தியின்மீது ஏற்படுத்திய தாக்கமும் – ஆய்வில் விரிவாகக் கையாளப்படுகின்றன. இவ்வாறு, குழந்தை இலக்கியத்தின் பாடுபொருள்கள் கல்வி, வளர்ப்பு, இயற்கை, கலை, ஒழுக்கம், கற்பனை ஆகிய பல பரிமாணங்களில் அமைந்து, குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு வழிகோலுகின்றன என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

கலைச்சொற்கள் : குழந்தை, கல்வி, சமூகம், வாழ்க்கை

**முன்னுரை**

குழந்தை என்பது ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சியின் வெளிப்பாடு. இன்பத்தின் ஊற்று துன்பத்தின் பூட்டு. குழந்தை இருக்கும் இடம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும். குழந்தைச் செல்வம் யாரும் காணக்கிடைக்காத செல்வம் யாரும் காணக்கிடைக்காத விலைமதிக்க முடியாத செல்வம். வாழ்கின்ற வாழ்க்கையின் அர்த்தம்.

குழந்தை இலக்கியத்தின் பாடுபொருள்களுள் கதைப்பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், நாட்டுப்புறபாடல்கள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் போன்றவையும் பாடுபொருளாக உள்ளன. குழந்தைக்கல்வி, குழந்தைப் பருவ பாடல்கள், குழந்தை வளர்ப்பு, குழந்தைப் பாடல்கள் என்று பலவாறு விரிந்துபட்டது. குழந்தைகளின் பாடுபொருள் இலக்கியங்கள் குழந்தையின் சிறப்பை வள்ளுவப் பெருந்தகையார் சிறப்பாக கூறியுள்ளார். தன் பெற்றோருக்கு குழந்தையின் அன்பான பேச்சானது இனிமையான குழலின் ஓசையைக் காட்டிலும், அருமையான யாழின் ஓசையைக் காட்டிலும் இனிமையானது என்று கூறியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு

*“குழலினது யாழினது என்பர்தம் மக்கள்*

*மழலைச் சொல் கேளாதவர்”*

இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது யாழின் இசை இனியது என்று கூறுவர்.

தம்முடைய குழந்தைகளின் சின்னச் சிறு கைகளால் அளாவப்பெற்ற உணவு பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட அதிக இனிமை வாய்ந்ததாகும்.

பாரதியாரும் குழந்தையின் சிறப்பை தம் கண்ணன்பாட்டு என்னும் நூலில் கண்ணனை குழந்தையாகப் பாவித்துப் பாடியுள்ளார். அவை

*“சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா*

*செல்வக் களஞ்சியமே*

*என்னைக் கலிதீர்த்தே – உலகில்*

*ஏற்றம் புரியவந்தாய்*

…………………………………………………………………

*சீர் பெற்று வாழ்வதற்கே உன்னைப்போல்*

*செல்வம் பிரிதுமுண்டோ!”*

குழந்தையைப் பாரதியார் கிளியே என்றும், செல்வக் களஞ்சியம் என்றும் கண்ணம்மா என்றும் குழந்தையைப் புகழ்ந்து பல பெயர்களில் அழைக்கின்;றார். இப்பாடல் வரிகளின் மூலம் நல்ல நயமுடைய கருத்துனை குழந்தைகளுக்கு எடுத்து இயம்புவதாகவும் அவை இளைய தலைமுளைக்கு ஒரு எழுச்சி மிகு சிந்தனையினை இவ்வுலகிற்கு எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன.

**குழந்தைப்பருவம்**

குழந்தைப் பருவம் மிகவும் அதிசயப் பருவமாகும். குழந்தைப் பருவ நிகழ்வுகள் ரசிக்கக்கூடிய ஒன்றாகும். குழந்தைப் பருவ நிலையினை குமரகுருபரர் மிக பொருத்தமாக பத்து பருவங்களாக்கி எடுத்துரைக்கிறார். இவை ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் எனவும் வகைப்படுத்தியுள்ளார்.

**பத்துப்பருவம்**

காப்புப்பருவம், செங்கீரைப்பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வருகைப்பருவம், அம்புலிப்பருவம், சிற்றிற்பருவம், சிறுபறைப்பருவம், சிறுதேர்ப் பருவம் என பத்து பருவங்களால் பகுத்துக்

கூறியுள்ளார். இதில் இறுதி மூன்று பருவமும் மாறுபடும் பாங்கில் பெண்பால் பிள்ளைத்தமிழ் பருவங்களாக கழங்கு, அம்மானை, ஊசல் என பாடுபடுத்தியுள்ளார்.

**குழந்தை வளர்ப்பு**

குழந்தைகள் பெற்றோரால் அன்புடனும், பாசத்துடனும் சமுதாயத்தில் வளர்க்கப்படுகிறார்கள். குழந்தைகள் சமுதாயத்தில் பல்வேறு திறமைகளை வளர்த்துக் கொண்டு உயர்ந்த மனிதனாக வளர அடித்தளமாக பெற்றோர்கள் அமைகின்றார்கள். பெற்றோர்கள் குழந்தையின் பொறுப்புகளையும், கடமைகளையும் உணரச் செய்து ஒரு சிறந்த மனிதனாக உருவாக்குகிறார்கள் இதனையே வள்ளுவர்

***ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனை***
***சான்றோன் எனக் கேட்ட தாய்***

தாய் தன் மகனை பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியை விட அவனை பிறர் புகழும் போது அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை என்று, அந்தப் பாடல் குழந்தையின் சிறப்பை மற்றவர்கள் கூறும்போது அதன் முழு பண்பையும் காணமுடியும் என்று விளக்குகின்றது.

**குழந்தைக் கல்வி**

குழந்தையை மையமாக கொண்ட கல்விக்கு இன்றைய சூழ்நிலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. குழந்தைகள் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையிலும் அவர்களின் அறிவினை மெருகேற்றும் வகைகளும் பாடத்திட்டங்களும், பாடமுறைகளும் அமைந்துள்ளன. அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளும் குழந்தைகளின் கற்றல் திறனை அறிந்து அதற்கு ஏற்ப வழிமுறைகளை மேற்க்கொள்கின்றன. அரசு 6 முதல் 12 வகுப்பு வரை அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வியை அறிமுகப்படுத்தி அனைத்து குழந்தைகளையும் கற்றலில் ஆர்வம் உடையவாறு செய்கின்றது. மேலும், பல்வேறு நலத்திட்டங்களையும், சலுகைகளையும், அளித்து அவர்களின் இடைநிற்றலை தவிர்த்து கல்வியைத் தொட வழிவகை செய்கிறது. கற்றலுக்கு தேவையான அனைத்து உதவிகளையும், செய்து மாணவர்களை கற்றல் திறனின் மேம்படச் செய்கிறது. கல்வியின் தனித்துவத்தை விளக்கும் பாடல் ஒன்று,

***“கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு”***

கற்றவருக்கு எங்கு சென்றாலும் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்படும் என்பதை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது. கற்றலின் முக்கியத்துவத்தையும் அவற்றின் மதிப்பினையும் நன்கு இயம்பக்கூடிய வண்ணணம் அமைத்துக் காட்டியுள்ளன.

பள்ளிப்படிப்பின் முக்கியத்துவத்தைக் கூறும் பாடல் ஒன்று. பள்ளிக்கூடப் பையில் புத்தகங்களை வைத்துக் கொண்டு, பள்ளி சென்று பாடம் படித்து ஆண்டுதோறும் தேர்ச்சி அடைந்து அறிஞனாக மாறுவேன் என்று குழந்தை பாடுவதாக அமைந்த பாடல் பின்வருமாறு,

***பள்ளிக்கூடப் பையிலே***
***பாடப்புத்தகம் இருக்குது***
***பாடப்புத்தகம் இருக்குது***
***பலகை ஒன்றும் இருக்குது***

......................................

***அறிஞனாக மாறுவேன்***
***அனைவருக்கும் உதவுவேன்***

குழந்தையின் வாழ்வின் பள்ளிப் பருவ வாழ்க்கை என்றுமே மறக்க முடியாத நினைவுகள், அவர்களின் எதிர்கால வாழ்விற்கு அடித்தளமாக விளங்கும் கல்வியை பள்ளி சென்று நல்ல முறையில் பயின்று சமுதாயத்தில் உயர்ந்த நிலைமையை அடையவேண்டும் என்பதை இக்கருத்து விளக்குகின்றது.

குழந்தைகளுக்கு பள்ளிப்பருவம் என்பது மிகவும் முக்கியமான பருவமாகும் ஏனென்றால் குழந்தை பிறமனிதர்களிடம் பலகுமு; தருனம் அது அவ்வாறு குழந்தைகள் தன் நிலை மாறும் பருவத்தினை எடுத்து இயம்பும் விதமாக அமைந்துள்ளன.

**இயற்கைப் பற்றிய பாடல்**

இயற்கையோடு கொஞ்சிக் குலாவவும் பேசி மகிழவும், இயற்கையைப் பற்றிய பாடல்கள் பெரிதும் உதவி செய்கின்றன. இது குழந்தைகளிடம் இயற்கையழகை ரசிக்கும் திறனை வளப்பதாக உள்ளது.

***பட்டுநிலா நான் தான்***
***பார்க்க வந்தேனே***
***கட்டித் தயிரைக் கடலில் ஊற்றிக்***
***காண வந்தேனே***

பட்டு நிலா குழந்தையைக் காண பூமிக்கு வருகிறதாம் மேலும் கட்டித் தயிரை கடலில் ஊற்றி கலக்க வருவதாக நிலா குழந்தையிடம் சொல்வதாக அமைந்த பாடல் குழந்தை உலகத்தை அத்தனை இயல்பாக நெருங்கிவிட வழி செய்வதாக அமைந்துள்ளது.

**குழந்தைகளும் நாடகமும்**

முத்தமிழில் ஒன்று நாடகம், மற்ற இரண்டு தமிழ்களும் நாடகத்திற்குள் அடக்கமே திராவிட இயக்கத்தின் பிரச்சார பீரங்கியாக நாடகம் தமிழ்நாட்டில் இருந்தது தசரத மைத்தன் இராமனின் குமாரர்களான லவனும் குசனும் இராமகதையை ஆடிப்பாடி நடித்து நாடு முழுவதும் பரப்பியிருந்தார்கள். படித்து தெரிந்துக் கொள்வதைவிட, கேட்டுத் தெரிந்துக் கொள்வதை விட, பார்த்து தெரிந்துக் கொள்வது மனதல் ஆழமாக பதிந்து விடுகிறது. கல்மேல் எழுத்தாக நிலைத்து விடுகிறது. இதற்கு உதாரணமாக சொல்லப்படுவது சிறுவன் காந்தி மனதில் அரிச்சந்திரன் நாடகம் ஏற்படுத்திய தாக்கம் அவரை மகாத்மாகவே மாற்றி விடுகிறது.

நாடகக்கூறுகள்

கதைக்கோப்பு, பாத்திரம், உரையாடல், பின்னணி, வாழ்க்கையின் பொருண்மைகள் ஆகிய கூறுகள் நாடகத்தின் இன்றியமையாத கூறுகளாக உள்ளன.

***"பல்லவ அரசர்கள் நாடகக் கலையை வளர்த்தவர்கள்***

***பிற்கால சோழர்களும் அதன் வளர்ச்சிக்கு உதவினார்கள்***

முடிவுரை

- குழந்தைகளின் பாடுபொருள் இலக்கியங்கள் பல்வேறு தலைப்புகள் பகுத்தாரயப்பட்டுள்ளது.
- குழந்தைப்பருவம், குழந்தை வளர்ப்பு, குழந்தைக்கல்வி, சிறுவர் பாடல்கள், நன்னெறிப்பாடல்கள் போன்றவை பற்றி பகுத்தாரயப்பட்டுள்ளன.
- கதைப்பாடல்கள், வேடிக்கைப்பாடல்கள் போன்றவையும் பகுத்தாரயப்பட்டுள்ளன.
- கவிதை, சிறுகதை, படக்கதைகள், பொது அறிவு, உரையாடல் போன்ற பாடுபொருள்களும் பகுத்தாரயப்பட்டுள்ளன.

**பார்வை நூல்கள்**


1. திருக்குறள், பரிமேலழகர் உரை, தஞ்சாவூர் -பக் -66
2. பாரதியார் கவிதைகள், உமா பதிப்பகம், சென்னை 60001 முதல் பதிப்பு – மே 2008 - பக்கம் - 282
3. அழ.வள்ளியப்பா - ஆடும் மயில் -பக் -37
4. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை – தே.வேலப்பன் - பக் - 37
5. அழ.வள்ளியப்பா - மலரும் உள்ளம் - பக் - 64